ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கள்ளம் மனம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ கள்ளம் மனம் ‖

## திருச்சிறுபுலியூர்

‡கள்ளம் மனம் விள்ளும் வகை⋆ கருதிக் கழல் தொழுவீர்⋆
வெள்ளம் முது பரவைத்⋆ திரை விரிய⋆ கரையெங்கும்
தெள்ளும் மணி திகழும்⋆ சிறு புலியூர்ச் சலசயனத்
துள்ளும்⋆ எனதுள்ளத்துள்ளும்⋆ உறைவாரை உள்ளீரே (1)

தெருவில் திரி சிறு நோன்பியர்⋆ செஞ்சோற்றொடு கஞ்சி
மருவி⋆ பிரிந்தவர் வாய்மொழி⋆ மதியாது வந்தடைவீர்⋆
திருவில் பொலி மறையோர்⋆ சிறுபுலியூர்ச் சலசயனத்து⋆
உருவக் குறள் அடிகள் அடி⋆ உணர்மின் உணர்வீரே (2)

பறையும் வினை தொழுதுய்மின் நீர்⋆ பணியும் சிறு தொண்டீர்!⋆
அறையும் புனல் ஒருபால்⋆ வயல் ஒருபால் பொழில் ஒருபால்⋆
சிறை வண்டின மறையும்⋆ சிறுபுலியூர்ச் சலசயனத்-
துறையும்⋆ இறையடியல்லது⋆ ஒன்றிறையும் அறியேனே (3)

வானார் மதி பொதியும் சடை⋆ மழுவாளியொடொருபால்⋆
தான் ஆகிய தலைவன் அவன்⋆ அமரர்க்கதிபதியாம்⋆
தேனார் பொழில் தழுவும்⋆ சிறுபுலியூர்ச் சலசயனத்-
தான் ஆயனது⋆ அடியல்லது⋆ ஒன்றறியேன் அடியேனே (4)

நந்தா நெடு நரகத்திடை⋆ நணுகாவகை⋆ நாளும்
எந்தாய்! என⋆ இமையோர் தொழுதேத்தும் இடம்⋆ எறிநீர்ச்
செந்தாமரை மலரும்⋆ சிறுபுலியூர்ச் சலசயனத்து⋆
அந்தாமரை அடியாய்!⋆ உனதடியேற்கருள் புரியே (5)

முழுநீலமும் அலர் ஆம்பலும்⋆ அரவிந்தமும் விரவி⋆
கழுநீரொடு மடவார் அவர்⋆ கண் வாய் முக மலரும்⋆
செழு நீர் வயல் தழுவும்⋆ சிறுபுலியூர்ச் சலசயனம்⋆
தொழுநீர்மையதுடையார்⋆ அடி தொழுவார் துயரிலரே (6)

‡சேயோங்கு⋆ தண் திருமாலிருஞ்சோலை மலை உறையும்
மாயா⋆ எனக்குரையாய் இது⋆ மறை நான்கின் உளாயோ⋆
தீயோம் புகை மறையோர்⋆ சிறுபுலியூர்ச் சலசயனத்
தாயோ⋆ உனதடியார் மனத்தாயோ⋆ அறியேனே⋆ (7)

மையார் வரி நீலம்⋆ மலர்க் கண்ணார் மனம் விட்டிட்டு⋆
உய்வான் உன கழலே⋆ தொழுதெழுவேன்⋆ கிளி மடவார்
செவ்வாய் மொழி பயிலும்⋆ சிறுபுலியூர்ச் சலசயனத்து⋆
ஐவாய் அரவணைமேல்⋆ உறை அமலா! அருளாயே (8)

‡கருமா முகில் உருவா!⋆ கனல் உருவா! புனல் உருவா⋆
பெருமால் வரை உருவா!⋆ பிறவுருவா! நினதுருவா!⋆
திருமா மகள் மருவும்⋆ சிறுபுலியூர்ச் சலசயனத்து⋆
அருமா கடல் அமுதே!⋆ உனதடியே சரணாமே (9)

‡சீரார் நெடு மறுகில்⋆ சிறுபுலியூர்ச் சலசயனத்து⋆
ஏரார் முகில் வண்ணன் தனை⋆ இமையோர் பெருமானை⋆
காரார் வயல் மங்கைக்கிறை⋆ கலியன் ஒலி மாலை⋆
பாரார் இவை பரவித் தொழப்⋆ பாவம் பயிலாவே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥